

# இல்லாதோரை உள்ளவர்கள் ஆக்குவோம்

BKT 0141
26/08/2023

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය



“ வறுமை ஒழிப்புக்கென பின்பற்றப்பட வேண்டிய கொள்கை வழிகாட்டிகள் ” பற்றி உயர் மட்டத்து உத்தியோகத்தர் மாநாட்டில் மேதகு ´ சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் கொழும்பு “ சவ்சிறிபாய ” மண்டபத்தில் ஆற்றிய உரை

1989.02.13



## " வறுமை ஒழிப்புக்கென பின்பற்றப்பட வேண்டிய கொள்கை வழிகாட்டிகள் " பற்றி உயர் மட்டத்து உத்தியோகத்தர் மாநாட்டில் மேதகு சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் கொழும்பு " சவ்சிறிபாய " மண்டபத்தில் ஆற்றிய உரை

1989.02.13

நாங்கள் எடுக்கின்ற தீர்மானங்களை அமுல் நடாத்தவிருக்கின்ற உயர் அதிகாரிகள் என்ற முறையிலே எங்களுடைய சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கொள்கைகளை விளக்குவது முக்கியமானதென்று நான் நினைக்கின்றேன். இந்த சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரு நல்ல நோக்கு உண்டு. அந்த நோக்கினை நாங்கள் ஆரம்பத்தில் இருந்து புரிந்து கொள்ள வேண்டும் . அந்த நோக்கினை நன்றாகப் புரிந்து கொண்டால் மட்டுமே அதற்கு ஏற்ற செயல் திட்டங்களை நாங்கள் நிறைவேற்றிக் கொள்ளலாம் . அந்தக் கொள்கைகளை நல்ல முறையிலே நெறிப்படுத்தினால்தான் எங்களுடைய செயல் திட்டங்களையும் நாங்கள் நன்றாக நடைமுறைப் படுத்த முடியும்.

இந்த சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தைப் பற்றிய பல கொள்கை விளக்கங்களை 1988 ஆம் ஆண்டு யூலை மாதம் 3 ஆந் திகதி ஆனமடுவையில் நடைபெற்ற கிராம எழுச்சி விழாவின்போது விளக்கிக் கூறினேன். அன்று அந்த கிராம எழுச்சி விழாவின் இறுதி நாளன்று முன்னைநாள் ஜனாதிபதி அவர்கள் அதில் பங்கு கொண்டார்கள். அன்று நான் நிகழ்த்திய சொற்பொழிவு பிரசுரிக்கப்பட்டு இருக்கின்றது. அதன் பிரதிகள் இங்கு உள்ள உங்கள் அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் தயவுசெய்து அந்த உரையை முழுமையாக வாசித்தறியவேண்டுமென்று மிகவும் விநயமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த சனசக்தித் திட்டத்தின் ஒரு சிறு துளியை மாத்திரம் நாங்கள் இங்கே உட்புகுத்தி இருக்கின்றோம்.

அதன் சில பகுதிகளை உங்களுக்கு வாசித்துக்காட்ட விரும்புகிறேன். 8 ஆவது பக்கத்திலிருந்து நான் வாசிக்கின்றேன் —

" நாங்கள் எந்த அபிவிருத்தித் திட்டத்தை அமுல் நடாத்தினாலும் அது ஏழை எளிய மக்களுடைய நல்வாழ்வுக்காக அமைய வேண்டுமென்பதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எந்த அபிவிருத்தித் திட்டமும் மக்களை

வாழ்விப்பதற்குத்தான் தேவைப்படுகின்றது. நீர்ப்பாசனத் திட்டங்கள் தேவைப்படுவது மக்களை வாழ்விப்பதற்குத் தான். பெருஞ்சாலைகள் தேவைப்படுவது மக்களை வாழவைப்பதற்காகத்தான். மின்சாரம் தேவைப்படுவது மக்களை வாழவைப்பதற்காகத்தான். விஞ்ஞானம் விஞ்ஞானத்திற்கு மட்டும் தேவைப்படுவது அல்ல. மக்களுக்காகத்தான். தொழில்நுட்பம் தேவைப்படுவது தொழில்நுட்பத்துக்காக மட்டுமே அல்ல. மக்களுடைய நன்மைக்காகவும், மக்களுடைய சேமநலத்துக்காகவும் தேவைப்படுகின்றது. மக்களைப் பட்டினியால் வாடவைத்துவிட்டு, மக்களை சாகடித்துவிட்டு எங்களுக்கு ஒரு அபிவிருத்தித் திட்டம் தேவைப்படுவதில்லை என்பதை நாங்கள் நன்கு கருத்தில் கொள்ள வேண்டும். அரசாங்கம் மக்களுடைய சேமநலத்தைக் கருத்தில் கொண்டுதான் எந்த நிலையிலும் செயல்பட வேண்டும். விஞ்ஞானம் யாருக்காக ? தொழில்நுட்பம் யாருக்காக ? விஞ்ஞானத்தின் மூலமாக நோய் நிவாரணம் செய்ய முடியாவிட்டால், விஞ்ஞானத்தின் மூலமாக மக்களுடைய கவலையைப் போக்க முடியாவிட்டால், துயரைப் போக்கடிக்க முடியாவிட்டால் அந்த விஞ்ஞானத்தினால் ஏற்படுகின்ற பயன் என்ன ? தொழில்நுட்பத்தின் மூலமாக மக்களுடைய வறுமையைப் போக்க முடியாவிட்டால், மக்கள் மத்தியிலே இருக்கின்ற தொழில் பிரச்சனையைத் திர்க்க முடியாவிட்டால், இயலாமையைத் தீர்க்க முடியாவிட்டால் அதனால் ஏற்படும் பயன் என்ன ? விஞ்ஞானிகளினால், தொழில்நுட்ப வல்லுநர்களினால் மக்களுடைய துயரைப் போக்க முடியாவிட்டால், வறுமையை நீக்க முடியாவிட்டால் அந்த விஞ்ஞானிகளினால், தொழில் நுட்பவல்லுநர்களினால் மானிட குலத்துக்கு என்ன பயன் என்று கேட்க விரும்புகிறேன். அப்படியென்று சொன்னால் மக்களுக்கு தேவைப்படுகின்ற உதவி ஒத்தாசைகள் எருமைகள் மூலமாக, எருதுகள் மூலமாக, மாடுகள் மூலமாக அதைவிட எங்களுக்கு பயன்பெறக்கூடிய விதத்தில் அமைந்திருக்கின்றன. அந்த அப்பாவி மிருகங்கள் எந்தவிதமான விஞ்ஞானத்தையும். தொழில்நுட்ப அறிவையும் பெற்றுக்கொள்ளாமல் மானிட வர்க்கத்துக்கு எவ்வளவு உதவிகள் புரிகின்றன. "

அது என்னுடைய உரையின் ஒரு பகுதியாகும். இன்னொரு இடத்திலே சொல்லுகின்றேன் —

" எங்களுடைய மக்கள் தொகையில் அரைவாசிப் பேர்கள் உணவு முத்திரை மூலமாக வாழுகின்றார்கள். அந்த மக்களை எப்படியாவது அந்த நிலையிலிருந்து நாங்கள் மீட்க வேண்டும். ஏழ்மையிலிருந்து, வறுமையிலிருந்து அவர்களை மீட்க வேண்டும். எங்களுடைய நாடு செல்வமான நாடு. மக்களில் சரிபாதியினர்

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

ஏழ்மையிலே தவித்தாலும் எங்களுடைய நாடு நல்ல செல்வ நாடாக, வளமான நாடாக, இயற்கை வளங்கள் உள்ள நாடாக மிளிருகின்றது. இந்த நாட்டை ஐரோப்பாவாகவோ, அமெரிக்காவாகவோ, ஆபிரிக்காவாகவோ ஆக்குவதற்கு எமக்குத் தேவையில்லை. நாங்கள் ஒரு ஆசிய நாடாக ஆக்குவோம். நல்ல குணதர்மங்கள் மூலமாக, நல்ல சுயசக்தியின் உழைக்கக் கூடிய விதத்திலே இந்த நாட்டை நாங்கள் முன்னேற்றகரமாக ஆக்க முயற்சி செய்ய வேண்டும். ''

இன்னொரு இடத்திலிருந்து —

'' எங்களுடைய முயற்சியெல்லாம் இந்த இல்லாமையை ஒழிக்க வேண்டும். புகழ் பெற்ற அமெரிக்க முன்னைநாள் ஜனாதிபதி ஒருவர் சொன்னார்கள் :

தமக்குள்ளே பெரும்பான்மையினரான ஏழை எளியவர்களை வறுமைத் தளையினின்றும் காப்பாற்றவியலாத சமுதாயமொன்றுக்குத் தம் மத்தியிலுள்ள மிகச் சிலரான செல்வந்தர்களை காப்பாற்ற முடியும் என்பது இயலாத காரியமாகும். ஜனாதிபதி ஜோன் எப். கென்னடி அவர்கள் தான் அவ்விதம் கூறினார்கள். மக்களுடைய குணவியல்புகளை நன்கு அறிந்து கொள்ளாமல் உயர் மட்டத்தில் உள்ளவர்கள் தங்களுடைய பணியைத் தொடருவதற்கு முயற்சிப்பார்களேயானால் அதன் மூலமாக எவ்வளவோ வீண்விரயங்கள் தான் ஏற்படும். நாங்கள் ஒவ்வொரு குடும்பத்தையும் எடுத்துக் கொண்டு அந்தக் குடும்பத்திலுள்ள மக்களுடைய குறைபாடுகளை நன்றாக அறிந்து கொண்டு, அக் கஷ்டநிலையிலிருந்து மீளுவதற்கு அவர்களுக்கு நிவாரணம் அளிக்க முயல வேண்டும். அதுதான் எம்முள் உள்ள மிகவும் அத்தியாவசியமான விடயமாகும். அதுதான் எம்முன் உள்ள சவாலாகும். இல்லாதவர்கள் நிசப்தமாக, மௌனமாக கஷ்டமுறுகிறார்கள். நாம் வாக்குகளைப் பெறுவதற்கென்றால் அவர்கள் அனைவரையும் காண்பதற்குச் செல்கின்றோம். நாங்கள் அவர்கள் அனைவரிடத்திலிருந்தும் வாக்குகளைப் பெற்றுக் கொள்கின்றோம். அதன் பிறகு என்ன நடக்கின்றது ? அதன் பிறகு வாக்குகளைப் பெற்று வெற்றி கொண்டவரைச் சிலர் சூழ்ந்து கொள்கின்றனர். நாம் இத் தோற்றப்பாடுபற்றி ஆய்வொன்றை மேற்கொண்டோம். அந்த ஆய்வின்படி மிகச் சிலர் மாத்திரம்தான் வாக்குகளைப் பெற்றவரிடத்திலேயிருந்து பயனடையக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். ''

இன்னொரு இடத்திலிருந்து வாசித்துக் காட்டுகிறேன் —

"நாங்கள் ஒரு தேயிலைத் தளிருக்கு அளிக்கின்ற கவனம், ஒரு இறப்பர் செடிக்குச் செலுத்துகின்ற அக்கறை, ஒரு தென்னைக் கன்றுக்கு அளிக்கின்ற கவனம், அக்கறையை ஒரு ஏழைக் குடும்பத்துக்கு அளிக்கின்றோமா, அக்கறை

எடுக்கின்ருேமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு தேயிலைச் செடிக்கு, ஒரு இறப்பர் மரத்துக்கு, ஒரு தென்னைக் கன்றுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டு இருக்கின்றது ? என்ன நோய் ஏற்பட்டு இருக்கின்றது ? இதைத் தீர்ப்பதற்கு வழி என்ன ? என்பதைப் பற்றியெல்லாம் விசாரித்து, ஆய்ந்து அறிவதற்காக வல்லுநர்கள் எவ்வளவோ முயற்சி எடுத்து வருகின்ருர்கள்.

இன்னெரு இடத்தில் —

"பாடசாலைகளிலிருந்து வெளியேறி வருகின்ற ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் பெரும் ஏமாற்றத்துடன் இருக்கின்ருர்கள். அவர்களைக் கவ்விக் கொண்டு, அவர்களைத் திசை திருப்பிச் செல்லுவதற்காக எத்தனையோ தீயசக்திகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. வழி தவறிச் செல்லும் இந்த இலட்சக் கணக்கான மக்களை அத் தீய வழியினின்று காப்பாற்றிக் கொள்வது எங்களது தலையாய கடமையாக இருக்கின்றது. எங்களுக்கு ஒத்துழைப்பு நல்குகிறவர்களிடத்திலே நாங்கள் தயவாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிருேம் நீங்கள் விரும்பினுல் 10, 12, 15 அல்லது 20 வருடங்களுக்கு நீடியகால உதவிகளை வழங்கலாம். ஆனுல் எங்களுக்கு அத்தியாவசியமாக உடன் உதவி இப்பொழுது தேவைப்படுகின்றது. ஆகவே தயவுசெய்து அந்த உதவிக்காக நீங்கள் கைகொடுத்து உதவுங்கள் என்று அவர்களைப் பார்த்து நாங்கள் கேட்டுக் கொள்கின்ருேம். இது எங்களுடைய சிந்தனையின் ஒரு சிறு துளி மாத்திரம் தான்.

கடந்த வருடங்களில் எங்களுடைய நாட்டின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக வேண்டிய பணியை நாங்கள் தொடர்ந்தோம் என்பது உங்களுக்கு நன்ருகத் தெரியும். நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்த நாங்கள் செயல்திட்டம் வகுத்தோம். மகாவலி கங்கைத் திட்டம் அதில் ஓர் அங்கம். மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய விதத்திலே அவைகளை நாங்கள் உருவகப்படுத்தினேம். இந்த மகாவலி கங்கை திட்டத்தின் கீழ் 5 பெரிய நீர்த்தேக்கங்களை உருவாக்கி இருக்கின்ருேம். அந்த 5 நீர்த் தேக்கங்களிலிருந்தும் நாங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ருேம். அதன் உண்மைப் பிரயோசனங்கள் வருகின்ற இரண்டு வருட காலங்களுள் அனைத்து கிராமங்களுக்கும் கிடைக்கும். பெருஞ்சாலைகள் நிர்மாணிப்பதற்காக வேண்டிய வேலைத் திட்டங்களைப் பூர்த்தி செய்து இப்பொழுது அமுல் நடாத்தி வருகின்ருேம். எங்களுடைய வாணிபத்தை நாங்கள் சுதந்திரமாக ஆக்கி இருக்கின்ருேம். சிறிய, பெரிய கைத்தொழில் துறைகளிலே நாங்கள்

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

எவ்வளவோ முன்னேற்றத்தைக் காண்பதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். எதிர்வருகின்ற இரண்டு வருட காலத்துக்குள் இந்த நாட்டு மக்கள் தொகையில் சரிபாதியினர் அதாவது உணவு முத்திரையால் வாழுகின்றவர்கள் — 5 பேர்கள் அடங்கிய 15 இலட்சம் குடும்பங்கள் உள்ளன என்று எடுத்துக்கொண்டால் சுமார் 70 இலட்சம் அல்லது 80 இலட்சம் பேர்கள் கொண்ட வறுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு நல்வாழ்வு அளிப்பதற்காக வேண்டிய சகல முயற்சிகளையும் நாங்கள் மேற்கொள்ள வேண்டியதுதான் எங்களுடைய கடமையாகவும், இலட்சியமாகவும் இருக்கின்றது. எங்களுடைய விஞ்ஞானம், தொழில்நுட்பம், நிருவாகம் ஆகிய அனைத்தையும் இந்தச் சவாலை எதிர்கொள்ளத் தான் நாங்கள் பயன்படுத்த வேண்டும். மக்களை வலுப்படுத்தவும், அவர்களுக்கு சக்தியூட்டவும் நாங்கள் அவற்றைப் பயன்படுத்த வேண்டும். இன்று உணவு முத்திரைகள் பெறுகின்ற குறைந்தபட்சம் 5 பேரைக் கொண்ட குடும்பமொன்றுக்கு இப்பொழுது அதிகரித்திருக்கின்ற பணத்தையும் சேர்த்துப் பார்த்தால் கிடைக்கும் உணவு முத்திரைகளின் பெறுமதி 350/- ரூபாய்க்கு மேற்படாது என நான் நினைக்கவில்லை. அந்தக் குடும்பம் அந்தப் பணத்தினுல் எப்படிச் சீவிக்க முடியும் ? ஒரு வேளை சாப்பிட்டால் மறுவேளை சாப்பிட முடியாது. உடம்பிலே கிடக்கின்ற ஆடையைக் களைந்து விட்டால் வேறொரு ஆடை அவர்களுக்குக் கிடையாது. அவர்களுடைய குழந்தைகள் போசாக்கின்மையால் வாடுகின்றார்கள். தங்களுக்கென்று வீடு வாசல்கள், காணித் துண்டுகள் கிடையாது.

இந்த சனசக்தி திட்டத்தின் மூலம் எங்களுடைய மக்களுக்கு ஒரு சக்தியை, ஒரு வலுவை எடுத்துக் கொடுப்பது தான் எங்களுடைய நாட்டம். நாங்கள் இப்பொழுது எவ்வளவோ கருத்திட்டங்களுக்காகப் பணம் செலவழித்து வருகின்றோம். நாங்கள் இதன்பிறகு எங்களுடைய மக்களுக்காகத்தான் பணத்தை முதலீடு செய்ய இருக்கின்றோம். மக்களுக்காக செலவழிக்கும் பணம் தான் மிகவும் பிரயோசனமுள்ள முதலீடாக அமையுமென்பது கருத்து. எங்களுடைய அபிவிருத்தித் திட்டங்களின் மூலமாக நன்மை பெறுகின்றவர்கள் பொதுமக்கள் என்றால் அந்தப் பொதுமக்களுக்கு சக்தியை, வலுவை ஊட்டுவது தான் எங்களுடைய கடமை. மக்களை அபிவிருத்திக்கு நாங்கள் இணைத்துக் கொள்ள வேண்டும். உற்பத்தியின் மூலமாகத்தான் ஒரு நாட்டின் மூலதனத்தை நாங்கள் பெருக்க முடியும். மக்களை இணைத்துக்கொண்டு ஓர் உற்பத்திப் பெருக்கத்தைத் தான் நாங்கள் ஏற்படுத்த வேண்டும். இந்த சனசக்தித் திட்டம் அதற்காகத்தான். இந்த மக்களை சரீர சக்தி உள்ளவர்களாக ஆக்குவதுதான் எங்களுக்குத் தேவைப்படுகின்றது. அப்படி செய்தால்

மாத்திரம்தான் ஆரோக்கியமுள்ள மக்களாக அவர்கள் திகழ்வார்கள். அப்படியான ஒரு மக்கள் கூட்டத்தினர்தான் அபிவிருத்தியிலும், உற்பத்தியிலும் பங்குகொள்ள முடியும். அதற்காகத்தான் மாதாந்தம் 2,500/- ரூபாய் வழங்க இருக்கின்றோம். இப்பணத்தை யாருக்குக் கொடுக்க வேண்டும் என்பதைப்பற்றி தெரிவுசெய்ய வேண்டிய அவசியம் இப்போது இல்லை. அவர்கள் யார் என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. உணவு முத்திரைகள் பெறுகின்ற மக்கள் — குடும்பங்கள், உணவு முத்திரை பெறத் தகுதிவாய்ந்த ஏழை எளிய மக்கள். இந்த மக்களைப் புதிதாக தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இந்த மக்கள் யாரென்பதைப் பற்றி இனங்கண்டு கொள்வது அத்தியாவசியமாகும். அவர்களை இனங்கண்டு கொள்ளுவது கிராம மட்டத்திலே, மக்களுடைய முன்னிலையிலேயேதான் செய்யப்படல் வேண்டும். அப்படியில்லாமல் உத்தியோகத்தர்கள் வீடுவீடாகச் சென்று படிவங்களை நிரப்பி செய்யப்படும் இனங்காணும் முறையொன்று அல்ல. இதற்காக 25,000 கிராமங்களைப் பயன்படுத்த நாங்கள் தீர்மானித்துள்ளோம். அந்தக் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். நாங்கள் பிரிவொன்றை நிறுவப் போகின்றோம். அரசாங்க உத்தியோகத்தர்களும், கிராமத்திலே இருக்கின்றவர்களும் அதனோடு இணையவேண்டும். முழுக் கிராமத்தையும் அங்கே கூட்டி வரவேண்டும். இப்பொழுது உணவு முத்திரை பெறுகின்றவர்களும், உணவு முத்திரைகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களும் ஒவ்வொரு குடும்பமாக அங்கே. அழைக்கப்படல் வேண்டும். அப்படியென்றால் அந்தக் கிராமத்தில் உள்ள அனைத்து மக்களும் அதனைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அந்த மாதிரித்தான் நாங்கள் அவர்களை இனங்கண்டு கொள்ள வேண்டும். அப்படியில்லாமல் இது இரகசியமாகச் செய்யக்கூடிய ஒரு வேலைத் திட்டமல்ல. இந்த 25,000 கிராமங்களிலே ஏற்படுத்த இருக்கின்ற இந்த உப பிரிவுகள் இந்தக் குடும்பங்களைப் பற்றி, இந்தப் பிள்ளைகளைப் பற்றி விசாரித்து அறியவேண்டும். இந்த 2,500/- ரூபாயில் ஒரு பாகம் நாளாந்த செலவுக்கும், மறுபாகம் சேமிப்புக்கும் ஆகும். நாளாந்தம் எப்படி செலவழிக்க வேண்டுமென்பதைப் பற்றி ஆலோசனை வழங்க வேண்டும். நல்ல போசாக்குள்ள உணவுற்பத்தியை அவர்களாலே செய்து கொள்ள முடியும். அதற்கு அவர்களுக்கு வழி காட்டுதல் வேண்டும். அப்படியில்லாவிட்டால் இந்தப் பணம் தேவையில்லாதவற்றுக்குச் செலவழிக்க ஏற்படும். இது ஒரு பஞ்சப்படி அல்ல. மக்களுடைய போசாக்குக்காகவும் மக்களுடைய உயர்வுக்காகவும் அளிக்கப்படும் ஒரு உதவியாகும்.

அங்ஙனம் ஏற்படுத்த இருக்கின்ற அந்த உப பிரிவு இந்த வகையிலே மக்களுக்கு ஆலோசனை நல்க வேண்டும். அவர்களை அதற்காக ஆற்றுப் படுத்தல் வேண்டும். சேமிக்கவிருக்கின்ற அந்தப் பணம் வங்கியிலே போடப் படும். 24 மாதங்களில் அந்தப் பணம் 25,000 மாகப் பெருகும். அந்தப் பணத்தின் மூலமாக அந்தக் குடும்பத்துக்கு ஏதாவது ஒரு தொழிலிலே செலவழிக்க ஏற்பாடு செய்ய முடியும். இவ்வாறு ஏற்படுத்தப்பட இருக்கின்ற இந்தப் பிரிவு, ஒவ்வொரு குடும்பங்களையும் எடுத்துக்கொண்டு குடும்பத் தவர்களுடைய விருப்பு வெறுப்புக்களை ஆய்ந்து இயன்றவரை ஒரு சிறு கைத்தொழில் அல்லது வியாபாரம் அல்லது விவசாயம் செய்யக்கூடிய நிலையிலே அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் . உணவு முத்திரை பெறுகின்ற, அல்லது உணவு முத்திரை பெறுவதற்குத் தகுதி வாய்ந்த, அல்லது, ஏழ்மையில் வாடுகின்ற அந்த ஏழைக் குடும்பங்களைத்தான் நாங்கள் இந்த நிலையிலே பரிசீலித்துப் பார்க்க வேண்டும். ஏனைய குடும்பங்களும் அந்தக் கிராமத்திலே வாழுகின்றன. அந்தக் குடும்பங்கள் இந்த 2,500/- ரூபாயைப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் அல்லர். அவர்களுக்கு ஏதாவது சொத்தாதனம் இருக்கின்றது. அந்தப் பிரிவில் கடமையாற்றுபவர்கள் அந்த வகையானவர்களையும் வெவ்வேருகச் சென்று காணவேண்டும். அந்தக் குடும்பங்களைப் பற்றியும் அவர்கள் விசாரித்து அறிய வேண்டும். அவர் களுடைய குறைபாடுகள் என்ன, அவர்களுடைய சக்தி என்ன, அவர்களுக்கு என்ன கிடைக்கின்றது, என்ன இருக்கின்றது என்பதைப் பற்றி அறிய வேண்டும். அவர்களுடைய திறமைகளை, அவர்களுடைய தகைமைகளை எந்த விதத்திலே முன்னேற்றகரமாகப் பாவிக்கலாம் என்பதைப் பற்றி அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்க வேண்டும். அரசாங்கத்திஞல் வழங்கப்படும் கடன் வசதிகள் இருக்கின்றன. உதவி ஒத்தாசைகள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி அந்தக் குடும்பங்களுக்குத் தெரியாது. அந்தக் குடும்பங்களிலே நல்ல தகைமையுடையவர்கள், திறமையுடையவர்கள் இருக்கலாம். மிக வறுமை யிலே வாடுகின்ற குடும்பங்களிலே இருக்கின்ற பிள்ளைகள் தகுதியுடையவர் களாக, திறமைசாலிகளாக நல்ல சூரர்களாக இருக்கின்ருர்கள். இவ்வளவு நாட்களாக நாங்கள் அவர்களிடத்திலுள்ள குறைகளைப் பற்றியும் அவர்களுக்கு என்ன இல்லாமல் இருந்தது என்பது பற்றியும் அறிய முற்பட்டோமே தவிர, அவர்களுடைய திறமைகளைப் பற்றி நாங்கள் அலசி ஆராயவில்லை. நேற்று சில தினங்களுக்கு முன்பதாக ஒரு கிராமத்திலே ஒரு பிள்ளையுடைய கவித் திறமையை அறியக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அந்தச் சிறுமி அந்தக் கவிகளைப் பாடும்பொழுது கவிபாடுவதில் எவ்வளவு திறமை அச்

சிறுமிக்கு இருக்கின்றது என்பதைப் பற்றி நான் புரிந்து கொண்டேன். நான் விசாரித்துப் பார்த்தபொழுது அச் சிறுமி உணவு முத்திரைகளைப் பெறுகின்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பது புலனாகியது.

இன்னொரு இடத்திலே ஒரு பலகைத் துண்டைக் கொண்டு ஒரு சிறுவன் ஏதோ செய்திருந்தான். யாருடைய உதவியும் இல்லாமல் தன்னுடைய சுயசக்தியினால் அதைச் செய்திருந்தான். அந்தத் துறையிலே, அந்தத் தொழில்நுட்பத்துறையிலே அவனுக்கு பயிற்சி அளித்தால் அவன் மிகவும் திறமைசாலியாக வரலாம். வறுமை நிழலிலேயிருக்கின்ற மக்கள் மத்தியிலே நல்லவைகளைப், புதியவைகளைத் தோற்றுவிக்கக் கூடியவர்களை நாங்கள் காண்கின்றோம். இத்தனை காலமாக நாங்கள் இவர்களைப் பற்றித் தேடிப் பார்க்கவில்லை. ஏதாவது ஒரு வருமான வரிக்கு உட்படுத்த வேண்டுமென்று தான் நாங்கள் அவர்களைத் தேடிப் போனோமே தவிர, என்ன திறமைகள் இருக்கின்றது என்பது பற்றி அவர்களிடத்திலே சென்று தேடிப் பார்க்க நாங்கள் முனையவில்லை. காலனித்துவ காலத்தில் எங்களை ஆட்சி செய்தவர்கள் எங்கள் வளத்தைச் சூறையாடி ஆட்சி செய்தார்கள். நாங்கள் வளருவதற்காக எங்களுக்கு அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. எங்களுடைய உள்ளார்ந்த திறமைகளை அவர்கள் தேடிப்பார்க்கவில்லை. அந்த அடிமை எண்ணங்கள் அந்த அடிமைக் கொள்கைகள் நாங்கள் சுதந்திரம் பெற்றும் இன்னும் எங்கள் மத்தியிலே நிழலாடுகின்றன. இந்த மனப்பான்மையை நாங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும். இந்தப் பணிகளிலே ஈடுபடுகின்ற அனைவர் மத்தியிலும் இந்த உணர்ச்சி ஏற்பட்டாக வேண்டும். எனவேதான், இத்தனை காலமாக அக்கறை செலுத்தப்படாமலிருந்த அந்தக் குழுவினரை, அந்தப் பிரிவினரை நாங்கள் இனங்கண்டு தேடிப்பிடித்து அவர்களை நாட்டின் வளத்துக்காக வேண்டி உழைக்கக் கூடிய மக்களாக பரிணமிக்கச் செய்வதற்குத்தான் நாங்கள் முயற்சி செய்து வருகின்றோம். இந்த ஏழைக் குடும்பங்களுக்கு அளிக்கப்படுகின்ற இந்த 2,500/- ரூபாயை நான் முன்பு சொன்ன மாதிரி அது ஒரு பஞ்சப்படியாகக் கருதிக் கொள்ளல் ஆகாது. எங்களுடைய சமுதாயத்துக் காக வேண்டிய பணத்தைச் சேர்த்துக் கொள்வதற்காக நாங்கள் செலவழிக் கின்ற பணம் தான் இது. உணவு முத்திரைகள் பெறுபவர்கள் மாத்திரமல்லாது கிராமத்திலுள்ள அனைத்துக் குடும்பங்களையும் நாடிச் சென்று அவர்களுடைய குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நாம் வழங்கக்கூடிய உதவிகள் அனைத்தையும் வழங்கி, அவர்களின் உழைப்பாற்றலைச் சமுதாயத்தின் நன்மைக்குப் பயன் படுத்துவதே எமது வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த வேலைத்

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

திட்டத்துக்காக யார் மீதும் வரி செலுத்தத் தேவையில்லை. யாருடைய சம்பளத்தையும் வெட்டத் தேவையில்லை. நமக்குள்ள வளமூலங்களை பயன் படுத்தும்போது இத்திட்டத்திற்கு முதன்மை அளிப்பதுதான் தேவைப் படுகின்றது. நாங்கள் கருத்திற்கொள்ளாது இருக்கின்ற அந்த மாபெரும் வளமூலங்களை எங்களுடைய சமுதாயத்துக்காக பயன்படுத்துவதைத்தான் நாங்கள் செய்யப் போகிறோம். அதேபோன்று நமது ஏழை எளிய மக்களுக்கு வழங்கக்கூடிய காணிகளின் அளவினைத் தீர்மானிப்பதற்கும், அவ்வாறு காணி வழங்குதலின் பொருட்டு கிடைக்கக்கூடிய காணிகள் அனைத்தையும் பெற்றுக் கொள்வதற்கும் நான் கட்டளை பிறப்பித்துள்ளேன். ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவர்களது தேவைக்கேற்ப ஒரு வீடுவாசல், ஒரு காணித்துண்டு, இருக்க வேண்டுமென்பது எமது கருத்து. இந்த நகரப் புறங்களிலே இடமில்லாத பிரச்சனையிருந்தாலும் அவர்கள் குடியிருக்கின்ற வீட்டை அவர்களுக்கு உரித்தாக்க எங்களால் முடியும். அந்த நகர மக்களை ஏதாவது ஒரு உற்பத்தியில் ஈடுபடுத்த எங்களால் முடியும். இந்த மாதிரியான ஒரு நல்ல சிந்தனை தான் இந்த ஜனசக்தியிலே இடம்பெற்று இருக்கின்றது .

1988 ஆம் ஆண்டு யூலை மாதம் 3 ஆந் திகதி கம்உதாவ நிறைவுநாள் விழாவின் போது நான் ஆற்றிய அந்த உரையை நீங்கள் முழுமையாக வாசித்தால் இந்த நல்ல சிந்தனையை நீங்கள் நன்ருகப் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும். 25 ஆந் திகதி இந்த வேலைத்திட்டங்களைப் பற்றி வெளிக்கள அதிகாரிகளோடும் நான் பேசுவதற்கு இருக்கின்றேன். அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் போன்ற பணிப்பகங்களிலுள்ள அதிகாரி களாகிய உங்களுக்கு எங்களுடைய இந்தச் சிந்தனையில் ஒரு துளி அளவான பகுதியை எடுத்துரைப்பதற்கு நான் கருதியுள்ளேன். நாங்கள் இந்த கிராம மட்டத்திலே ஏற்படுத்த விருக்கின்ற இந்த உப பிரிவுகள் அல்லது கூறுகளை 25,000 கிராமங்களிலும் நிறுவுவதற்கு இருக்கின்ரேம். நாங்கள் ஊரிலுள்ள நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டும். கிராம மட்டத்தில், நகர்ப்புறங்களிலே தொண்டர் சேவைகளும், தொண்டர் படை களும் எவ்வளவோ இருக்கின்றன. அந்தத் தொண்டர் இயக்கங்கள் கிராமோதய சபைகளோடு இப்பொழுது இணைந்து இருக்கின்றன. அவர்கள் அனைவரையும் நாங்கள் இதனேடு இணைத்துக் கொள்ள வேண்டும். எங்களுடைய நாட்டில் உண்மையிலே 3 முக்கிய நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகள் வெவ்வேருகத்தான் செயல்பட்டு வருகின்றன. கிராமங்களிலே இருக்கின்ற புனித தலங்கள், பௌத்த புண்ணிய சேத்திரங்கள், இந்து, இஸ்லாம், கிறித்தவ மத தலங்கள் ஆகியன அவையாகும். இந்த மத தலங்களில்

எவ்வளவோ உயர்ந்த சாதனங்களை மக்களுக்கு அளிக்கின்றார்கள் என்பது பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்த மத தலங்களிலிருந்து தார்மீக சிந்தனைகளைத்தான் மக்களுக்கு அள்ளித் தருகின்றார்கள். அந்த இடங்களிலே உள்ள குருமார்கள், மதத் தலைவர்கள் முன்மாதிரியாகத் திகழுகின்றார்கள். அடுத்தபடியாக எங்களுடைய ஒவ்வோர் கிராமத்திலும் பாடசாலைகள் இருக்கின்றன. வளரும் சமுதாயம் இந்தச் சமுதாயத்திலே எப்படித் தங்களுடைய வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதைப் பற்றித்தான் பாடசாலைகள் மூலமாகவும் உபதேசம் புரியப்படுகின்றது. அதே போன்று ஒவ்வொரு பிரதேசத்திலும் பொலிசு நிலையமும் இருக்கின்றது. நாட்டிலே இருக்கின்ற சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி மக்களுக்கு ஆலோசனை வழங்குவதுதான் பொலிசின் கடைமையாகும். இத்தகைய தலையாய கடைமைகளைத்தான் பொலிசின் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. சட்டத்தை உடைப்பவர்களுக்கு, அதன் மூலமாக சமுதாயத்திலே ஏற்படுத்து கின்ற தீங்கினை உணர்த்துவதற்காகத்தான் சட்டத்தை உடைப்பவர்கள் நீதி விசாரணைக்காக நீதி மன்றங்களுக்குக் கொண்டு சென்று நிறுத்தப் படுகின்றார்கள், அப்படியென்றால் அந்தத் தண்டனை அந்த நீதிமன்றத்தின் தீர்ப்புப்கிணங்கத்தான் நடாத்தப்படும். அந்த அளவு வரையில் அந்தப் பொலிசுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் மக்களோடு ஆதரவாக நடக்க வேண்டும். மேலெழுந்த ரீதியாகச் சிந்திக்கும்பொழுது இந்த 3 இயக்கங்களும், பிரிவுகளும் அதாவது மத தலங்கள், பாடசாலைகள், பொலிசுகள் ஆகியவைகள் வெவ்வேறாக இயங்கினாலும் ஒரேயொரு குறிக்கோளை அடைவதற்குத்தான் இயங்கி வருகின்றன. ஆனால் இந்த இயக்கங்கள் 3 ம் வெவ்வேறாக இயங்குவதை அநேக இடங்களிலே காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த 3 முக்கிய நிறுவனங்களுக்கிடையில் ஒரு கூட்டிணைப்பு இல்லை. இந்த 3 பிரிவினர்களும் தங்களுக்கிடையில் ஒரு நெருங்கிய கூட்டிணைப்பை ஏற்படுத்திக்கொண்டு அந்தப் பகுதி மக்களின் நல்வாழ்வுக்காக உழைக்க வேண்டுமென்பது தான் என்னுடைய குறிக்கோளாகும்.

இந்த உங்களுடைய கிராமங்களிலுள்ள பொலிசார்களை அவர்களுடைய் உத்தியோக பூர்வ உடையில்லாமல் சாதாரண உடை தரித்து அந்த புனித தலங்களுக்குச் சென்று, வணக்கத் தலங்களுக்குச் சென்று அங்கேயுள்ள குருமார்ளோடு கதைத்து நாங்கள் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவும், சௌஜன்யத்தை ஏற்படுத்துவதற்காகவும் இயங்கி வருகின்ற ஒரு பிரிவினர், ஆகவே எங்களால் உங்களுக்கு ஆகவேண்டியது என்ன என்பது பற்றி விசாரித்து அறியுங்கள் என்று நான் பொலிசு மா அதிபருக்கு ஏற்கனவே

சொல்லி இருக்கின்றேன். அதே போன்று பாடசாலைகளுக்குச் சென்று அதிபர்களைச் சந்தித்து, மாணக்கர்களைச் சந்தித்து எதிர்கால நல்வாழ்வுக்காக உழைக்கக்கூடியவர்களாகவும் நாங்கள் இருக்கின்றோம், உங்களுடைய அபிவிருத்தியின் மேல்தான் எங்களுடைய அக்கறையெல்லாம் பதிந்திருக்கின்றன, ஆகவேதான் அவர்கள் பாடசாலைகளை விட்டு வெளியேறிய பிறகு அவர்களுக்கு தொழில்பெறும் விசயம் என்ன, அவர்கள் தொழில் வாய்ப்பை எப்படி பெற்றுக் கொள்ளப் போகின்றார்கள், அதற்காக வேண்டிய அடித்தளத்தை எப்படி நாங்கள் இடவேண்டுமென்பதைப் பற்றியும் அவர்களிடத்திலே போய் விசாரித்து அறியுங்கள் என்று கேட்டிருக்கின்றேன். இந்த மூன்று வகுப்பினரும், பிரிவினரும் இப்படியாக இணைந்து, இசைந்து செயல்பட்டால் எவ்வளவான ஒரு நல்ல சூழ்நிலை சமுதாயத்திலே ஏற்படுமென்பதை நீங்கள் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இந்தப் பிரிவுகள் 3 ம் மூன்று விதமாகத் தான் இப்பொழுது இயங்கி வருகின்றன. ஒரு சம்பந்தம் இல்லாததினால் ஒரு இயக்கம் செய்வது மற்றைய பிரிவினருக்குத் தெரியாமல் இருக்கின்றது. இந்த சனசக்தித் திட்டத்திற்குள் இந்த மாதிரியான புதுமையான ஒரு திட்டமும் உட்புகுத்தப்பட வேண்டும். மக்களுடைய ஆன்மீக, அதே போன்று பொருளாதார நன்மைக்காகத்தான் நாங்கள் இந்த சனசக்தித் திட்டத்தை ஏற்படுத்தி வருகின்றோம். அதன் மூலமாகத்தான் சமாதானம் உதயமாகும், ஒழுக்கம் ஏற்படும், சுபீட்சம் ஏற்படும். இந்தச் சீரிய நோக்கினையும், இந்தக் கொள்கைகளையினையும் நாங்கள் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த 3 நோக்கங்களின் அடிப்படையில் இந்த நாட்டின் நிருவாகத்தைக் கொண்டு செல்வதற்காகத்தான் என்னை இந்நாட்டு மக்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆகவே உயர்மட்டத்திலேயுள்ள நீங்கள் அனைவரும் இதனை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கிணங்கத்தான் பொருளாதாரத்திட்டங்களும் அமையப் போகின்றன. தொழில் நுட்பம் எங்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. ஆனால் அந்தத் தொழில்நுட்பம் மக்களை அடிமைப்படுத்தும் தொழில்நுட்பமாக அமைதல் கூடாது. ஓர் உதாரணமாக அண்மையிலே நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை நான் உங்களுக்குச் சொல்லலாம் :

உங்களுக்குத் தெரியும் அகுங்கல்லையில் ஏற்பட்ட அந்த கோரவிபத்தைப் பற்றி. றெயில் கேற் ஒன்று இல்லாமல் அந்த ஒரு வாகனத்தோடு புகையிரதம் வந்து மோதியது. சுமார் 40 பேர்கள் பாடசாலை சிறுவர், சிறுமியர் உட்பட அந்த ஸ்தலத்திலேயே மரணமானார்கள். 100 பேர் அளவில் காயமடைந்தார்கள். இதற்குக் காரணம் என்ன ? அங்கு ஒரு றெயில் கடவையொன்று இல்லாமல் இருந்ததுதான் காரணம். புகையிரதம் வரும்பொழுது அந்தக்

கடவை போட்டிராததின் காரணமாகத்தான் இவ்விபத்து நிகழ்ந்தது. அப்படியான ஒரு இடத்திலே ஒரு றெயில் கடவையைப் போடுவதற்கு சுமார் மூன்று இலட்சத்து ஐம்பதினுயிரம் ரூபாய் செலவாகுமாம். இப்படியான பாதுகாப்பற்ற றெயில்வே கடவைகள் சுமார் 700 மட்டில் நாடு பூராவும் இருக்கின்றன. ஒரு கேற் போடுவ்தற்கு மட்டும் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவாகுமென்ருல் 700 கேற்றுக்கள் மட்டில் போடுவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

இந்த இலட்சக் கணக்கான ரூபாய்களை செலவழிக்காமல் ஓரிடத்துக்கு நான் நம்புகிறேன் சுமார் 125/— ரூபாய் வீதம் செலவழித்து நாங்கள் அதனைச் சாதித்து இருக்கின்ரேம். நாங்கள் மனித சிரமத்தை, ஊழியத்தை அதற்காகப் பயன்படுத்தி இருக்கின்ரேம். 24 மணித்தியாலத்திலும் அங்கு ஒரு பாதுகாப்பு காணக்கூடியதாக இருக்கின்றது. அந்த இடங்களிலே வதிகின்ற உணவு முத்திரைகள் பெற்று வாழுகின்ற 6 பேருக்கு இப்பொழுது தொழில் கிடைத்து இருக்கின்றது. ஒருவருக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. இந்த சனசக்தித் திட்டத்தின்மூலம் அந்தக் குடும்பத்துக்கு 1,500/— ரூபாய் தான் இனிமேல் கிடைக்கும். புகையிரதம் வரும்போது இம்மாதிரியான மூங்கில் மரத்தால் அல்லது வேறு மரத்தாலான ஒரு கடவையைப் போடவேண்டு மென்று நாங்கள் கூறினேம். ஒரு வார காலத்துக்குள் அப் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. பாருங்கள் மூவாயிரம், நாலாயிரம் இலட்சம் செலவழிக்கின்ற இந்த பாரிய திட்டம் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விதத்தில் இலேசாக முடிந்திருக்கின்றது. ஏனைய துறைகளிலும் இப்படியாக சிந்திப்பதற்கு நாங்கள் பழகிக் கொள்ளல் வேண்டும். இன்று அநேக காரியாலங்களிலே கோப்புக்களைப் பெருக்குவதுதான் நடந்துகொண்டு இருக்கின்றது. கடிதங்களை எவ்வளவோ தூரத்துக்குக் குறைத்துக் கொள்ள லாம். அலுவலகங்களிலே வேலை செய்கின்றவர்கள் தங்களுக்குச் சம்பந்தப்பட்ட அந்த திட்டங்களைப் பற்றி எந்த நேரமும் கதைக்க வேண்டும். மாதிரிப் படிவங்களை நிரப்புவதை நாங்கள் குறைத்துக் கொள்ளலாம். இந்தக் காரியாலயங்களில் பெரிய மேசைகள் இருக்கின்றன. சரியாக படுக்கின்ற படுக்கைகள் போல. அஸ்வர் அவர்களுக்கு இப்பொழுது அது நினைவிற்கு வருகின்றது என நினைக்கின்றேன். இவ்வளவு காலமாக இதனையிட்டு நாங்கள் கருத்துச் செலுத்தவில்லை. நான் சொன்னபோது அவர்களுக்கு அது ஞாபகம் வந்திருக்கும் போலும். உங்கள் முன்னிலையிலேயே இருக்கின்ற மேசையைப் பாருங்கள். ஒரு அடியும் சில அங்குல அகலமுமுள்ள ஒரு மேசை. இந்த சின்ன மேசையிலே ஒரு கோப்பு வைத்துக்கொண்டு நீங்கள் அலுவல்களை நடாத்த

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

லாம். இது சிறிது என்று சொன்னால் இதைவிட சிறிது அகலமாக்கிக் கொள்ளலாம். இரண்டாகப் பிளந்து இரண்டு மேசைகளாகப் பாவிக்கக்கூடிய மிகப் பெரிய மேசைகளை அலுவலகங்களிலே நான் கண்டிருக்கின்றேன். மேசைகள் பெரிதாய் இருக்கும்பொழுது பெரிய இடவசதியும் தேவைப்படு கின்றது. பத்துப், பன்னிரண்டு பேர் பணிபுரியக்கூடிய இடத்தில் மூன்று, நான்கு பேர் தான் பணிபுரிகின்றார்கள். ஆகவே தேவையில்லாத கட்டிடங்கள் எழுப்பப்படவேண்டும். தேவையில்லாத தளபாடங்கள் எடுக்க வேண்டும். தேவையில்லாத டெலிபோன்களை நாங்கள் பொருத்த வேண்டும். நாங்கள் ஒரு உறுதிப்பாட்டோடு வேலை செய்தால் இவைகள் அனைத்தையும் குறைத்துக் கொள்ளலாம். இவைகளைப் பற்றி விசாரித்து அறிய வேண்டுமென்று திறைசேரிக்கு நான் ஆணை பிறப்பித்திருக்கின்றேன்.

நாங்கள் ஏதாவது ஒரு கருத்திட்டத்துக்கென்று பணம் ஒதுக்கினால் அதன் ஆரம்ப ஏற்பாடுகளுக்குத்தான் அப்பணத்தின் பெரும்பகுதி செலவாகின்றது. 1977 ஆம் ஆண்டு நான் பதவிக்கு வந்து இவ்வாறான கருத்திட்டமொன்றைத் தொடங்க வேண்டுமென்று எனது உத்தியோகத்தர்களுக்குச் சொன்ன பொழுது, எனக்கு முதன்முதலில் அனுப்பப்பட்ட கடிதம் யாது? அப்படியென்றால் இதற்கு இவ்வளவு இடவசதி கொண்ட அலுவலகம் தேவைப்படும், அந்த அலுவலகத்தின் பரப்பளவு இவ்வளவு சதுர அடிகளாக இருத்தல் வேண்டும், அதற்கு இவ்வளவு வண்டிகள் தேவைப்படுகின்றன, அதற்கு உத்தியோகத்தர்கள் இத்தனை பேர் தேவைப்படுகின்றனர், இவ்வளவு தொலைபேசிகள் தேவைப்படுகின்றன, தளபாடங்கள் தேவைப்படுகின்றன என்பதுதான் இருந்தன. இந்த வகையிலே நோக்கினால் அக்கருத்திட்டத்துக்கு செலவாகப் போகும் பணத்திலிருந்து 3/4 பங்கு ஆரம்ப ஏற்பாடுகளுக்கு ஒதுக்க வேண்டியிருக்கின்றது. எனவே நமது காரியாலயங்களில் ஒருவகையான மீளமைப்பு ஏற்பட வேண்டுமென்பதை நாங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அலுவலகங்கள் பெருகப் பெருக அங்கே சிலந்திக் கூடுகளும் பெருகுகின்றன. மேசைகள் பெருக்கப் பெருக்க மேசைகளுக்கு கீழே சிலந்திக் கூடுகளும் கட்டப்படுகின்றன. நீங்கள் உங்கள் அலுவலகங்களில் உள்ள மேசைகளுக் கடியில் என்ன இருக்கின்றது என்று எட்டிப் பாருங்கள். நல்ல அழகாக உடுத்து வந்து அவர்கள் அங்கே பணிபுரிகின்றார்கள், அங்கு சிலந்திக் கூடுதான் இருக்கின்றது மேசையின் கீழே. யார் இதைப் பற்றி அறிவது, தேடுவது ? சில காரியங்களிலே பைப் குழாய்களை திறந்துவிட்டு நாட் கணக்காக நீர் ஒடுவதை நான் கண்டிருக்கின்றேன். அலுவலகங்கள் மூடிய பிறகு யார் போய்ப் பார்க்கின்றார்கள் இந்த மின்சாரத்தை, லையிற்றை நாங்கள் அணைக்க

வேண்டும், இந்த பைப்புகளை, குழாய்களை நாங்கள் மூடவேண்டுமென்று யாராவது போய்ப் பார்க்கின்றார்களா. அதைப்பற்றி போய்ப் பார்ப்பவர்கள் ஒருவருமில்லை. அந்த மாதிரியான வீண் விரயத்தை நாங்கள் நிறுத்த வேண்டும். புதிய வரிகள் இதற்குத் தேவையில்லை. இந்த வீண்விரயத்தை நாங்கள் நிறுத்தினால் இந்த சனசக்தியைப் போன்று மூன்று, நான்கு செய்ய முடியும். ஆகவே நான் மேலும் பேச விரும்பவில்லை. உங்கள் சிந்தனைக்கு விருந்தாகத்தான் நான் இதனை எடுத்துரைத்தேன். நீங்கள் போய் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து எப்படியாக இந்தத் திட்டங்களை நாங்கள் வெற்றிகரமாக நடத்தலாம் என்பதைப்பற்றி நீங்கள் எனக்கும் உபதேசம் தரவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

25 ஆந் திகதி வெளிக்கள உத்தியோகத்தர்களோடும் நான் பேச இருக்கின்றேன். இந்த நோக்கத்திற்கு ஏற்பவும், இந்த செயல் திட்டத்துக்கு ஏற்பவும் நமது நிருவாக முறையினை முற்றாகவே மீளமைப்புச் செய்யும் பணியை நான் உங்களிடம் ஒப்படைத்து விடுகிறேன். வீண்விரயத்தை எவ்வளவு தூரத்துக்கு முடியுமோ அவ்வளவு தூரத்துக்கு குறைத்துக் கொள்ளுங்கள். ஓர் இடம் நோக்கி உத்தியோகத்தர் பலர் தனித்தனியாக வண்டிகளில் பயணம் செய்வது வழக்கம். ஆனால் அவர்கள் அனைவரும் ஒரே வாகனத்தில் செல்லக்கூடிய நிலை இருக்கின்றது. இந்த வீண்விரயத்துக்கான ஓர் எடுத்துக்காட்டை நான் கூறுகின்றேன். அலுமாரியொன்றை எடுத்துக் கொண்டு லொறி வண்டியொன்று கொழும்பிலிருந்து காலிக்குச் சென்றது. இன்னொரு வெற்று லொறி வண்டியொன்று காலியிலிருந்து கொழும்பிற்கு பண்டங்கள் சிலவற்றைக் கொண்டு வருவதற்காகச் சென்றது. ஒரே காரியாலயத்தில்தான் இந்த இரண்டு பணியும் இடம் பெற்றது. இதிலும் விந்தை என்னவென்றால் இந்த சம்பந்தப்பட்ட விடயத்தைச் செய்கின்ற இலிகிதர்கள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு இருக்கக்கூடிய விதத்திலேதான் கருமமாற்றி வருகின்றார்கள். ஒருவர் பொருள்கள் ஏற்றப்பட்ட லொறி வண்டியை அனுப்பினார். மற்றவர் அங்குள்ள பொருட்களை எடுத்துவர வெற்று லொறி வண்டியொன்றை அனுப்பினார். அவர்கள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு வேறு எல்லா விசயங்களையும் கதைத்துக் கொள்வார்கள். குறிப்பாக றேஸ் போடுவது பற்றி இவர்கள் கதைத்துக் கொள்வார்கள். இந்த நிகழ்ச்சி ஏற்பட்ட பொழுது நான் தேடிப் பார்த்தேன் எப்படி நடந்தது, யாரினால் இது நடந்தது என்று. அவர்கள் றேஸ் தாளை எடுத்துக்கொண்டு குதிரைகளின் பாரம் என்ன என்பதைப் பற்றி கதைத்துக் கொண்டு இருந்தார்கள் என்று நான் அனுப்பிய அந்த அதிகாரி

சொன்னார். தாங்கள் செய்த வேலையைப் பற்றி ஒருநாளும் கதைக்க வில்லை. இந்த இரண்டு வேலைகளுக்கும் ஒரே லொறி வண்டியைப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பிருந்தது. இதைப் பற்றி விசாரித்த பொழுது என்ன பதில் வந்தது என்றால் எங்களுக்குச் சொல்லியிருப்பது கோப்பிலே எழுதும்படிதான். இரண்டு பேருடைய கோப்பிலும் இது இருக்கின்றது, ஆனால் இருவரும் கோப்புக்களை வாசிக்கும் பழக்கம் இல்லாதவர்கள். இருவரும் இரண்டு விடயங்களுக்குப் பொறுப்பாக இருக்கின்றவர்கள். ஒரு கோப்பு ஒரு உத்தியோகத்தரிடம் போகின்றது. மறு கோப்பு மற்றைய உத்தியோகத்தரிடம் போகின்றது. தயவுசெய்து இந்த முறையை மாற்றிக் கொள்ளுங்கள். இதற்காக சுற்றுநிருபங்களை அரசாங்க நிருவாக அமைச்சு அனுப்பத் தேவையில்லை. அந்தந்தத் திணைக்களங்களுக்குப் பொறுப்பாக உள்ளவர்கள், அந்தந்த அமைச்சுகளின் செயலாளர்கள், அந்தந்தப் பகுதிகளுக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் இந்த மீளமைப்புகளைச் செய்து கொள்ளலாம். எனவே இத்தருணத்தில் ஆற அமர யோசித்து, சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தை மேலும் வலுப்படுத்துமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதுகாறும் மரபுவழியாக அமுல் நடாத்தப்பட்டு வரும் வேலைத் திட்டங்களுக்கு முழுமையான வகையில் இந்த சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படல் வேண்டும். இந்த சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தில் பொதுமக்களைப் பங்குபற்றச் செய்தல் வேண்டும். இந்த சனசக்தி நிகழ்ச்சித் திட்டமானது மக்களை உயரச் செய்து, அதன் மூலம் நாட்டைச் சிறக்கச் செய்யும் ஒரு திட்டமாதலால் இது எவருக்குமே சுமையாக இருத்தல் ஆகாது. இது உங்களுக்கும் சுமையாக அமையக் கூடாது. அந்த வகையிலே இது உங்களுக்கும், மனநிறைவு அளிக்கத்தக்கதோர் திட்டமாதலால் இதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு உறுதிபூணுமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

ජනාධිපති ලේකම් කාර්යාලය
26 AUG 2023
පුස්තකාලය